- **1. விண்ணப்பப் படிவம் (பதிவு செய்யும் போது தரப்படும்)**

❖ அனைத்து விண்ணப்பப் படிவங்களிலும் இலக்கம் அச்சிடப்பட்டிருக்கும். ஒரு விண்ணப்பதாரர் ஒரு விண்ணப்பப் படிவத்தை மாத்திரமே பெற்று ஒப்படைத்தல் வேண்டும். விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்கையில் ஏதாவது பிழைகள் ஏற்பட்டால் டிபெக்ஸ் செய்து மீண்டும் சரியாக நிரப்புதல் வேண்டும்.

❖ திறன்சார் பரீட்சைக்காக தோற்றும் வேளையில் ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு தேவைப்பட்டால் அதற்கான படிவத்தைப் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் அல்லது பதிவு செய்யுமிடத்திலிருந்து முன்கூட்டியே பெற்றுக்கொண்டால் அதனை விண்ணப்பம் அனுப்ப வேண்டியுள்ள காலத்தினுள் அவர் (ஆண்-பெண்) சமர்ப்பிக்கலாம்.

- **2. வெளிநாட்டுக் கடவுச் சீட்டின் பிரதி**

❖ விண்ணப்ப படிவத்துடன் இணைப்பதற்காக வெளிநாட்டுக் கடவுச் சீட்டின் பிரதியொன்று தேவையாகும்.

❖ ஆங்கிலத்தில் எழுதப்பட்ட உமது பெயருடனான கடவுச்சீட்டின் பிரதி விரும்பத்தக்கது

❖ தமது வெளிநாட்டுக் கடவுச் சீட்டில் உள்ள தனிப்பட்ட தகவல் ஒவ்வாத வகையில் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டிருந்தால் எப்படியாயினும் அவர் கொரியா செல்ல முடியாதென்பதுடன் அவர்தம் தனிப்பட்ட தகவல் வித்தியாசத்தினால் சிக்கலேற்படுமாயின் அவர்களே முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டும். எனவே விண்ணப்பதாரர்கள் பதிவிற்கு முன்னரே கடவுச்சீட்டை பெற்றுக் கொள்ளுமாறு காத்திரமாக அறிவுறுத்தப்படுகின்றனர்.

❖ விண்ணப்பதாரரினால் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தனிப்பட்ட தகவல்களான பெயர், பிறந்த திகதி மற்றும் பால் அத்துடன் விண்ணப்பப்படிவத்தில் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரியின் நிழற்படம் என்பனவற்றை கொரியாவில் எதிர்கால வேலைவாய்ப்பிற்காக நாம் அவற்றை பாவிப்பதுடன் இவைகளை எப்போதுமே மாற்ற முடியாது.

- **3. புகைப்படத்தின் அளவு – 3.5 x 4.5 செ.மீ. – 2 புகைப்படங்கள்**

(03 மாதங்களுக்குள் எடுக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்)

- யாராவது ஒருவர் புகைப்படத்தினால் பரீட்சையின்போது இனம்காண முடியாவிடில் அவர் (ஆண்-பெண்) பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது

- **4 பரீட்சைக் கட்டணம்**

**24 அமெரிக்க டொலர்களாகும் (அல்லது இலங்கை ரூபாவில் 3,627/=)**

விண்ணப்பதாரர் பதிவுக் காலத்தில் அவரது (ஆண்-பெண்) பதிவை தவிர்க்க இயலாத காரணங்களினால் இரத்துச் செய்ய விரும்பினால் விண்ணப்பதாரியானவர் முழுமையான பணமும் திருப்பிக் கொடுக்கப்படும். இருப்பினும் இரத்துச் செய்த பின்னர், மீள்விண்ணப்பம் அனுமதிக்கப்படமாட்டாது.

## 05. முதலாவது சுற்று பரீட்சை நிலையம் தொடர்பான அறிவித்தல் மற்றும் நேரம்-

- நிலையம் - கணனி சார்ந்த பரீட்சை நிலையம், 205, தெபானம, பன்னிப்பிட்டிய.
- அறிவிப்புச் செய்யும் நாள் - 2017 ஏப்ரல் 20
- முறை – 1. இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் செய்தித்திரட்டு மற்றும் முகப்புப் பக்கம்: www.slbfe.lk
  2. http://epstopik.hrdkorea.or.kr

## 06. பரீட்சைத் திகதி மற்றும் பரீட்சை காலப்பகுதி

**அ. பரீட்சைத் தினம் - 2017 ஏப்ரல் 27 ஆம் திகதி - செப்டம்பர் 29 ஆம் திகதி வரை (மாற்றங்கள் ஏற்படலாம்)**

(விண்ணப்பதாரர்களின் மொத்த எண்ணிக்கைக்கு அமைய பரீட்சைத் திகதிகளில் மாற்றம் ஏற்படும். ஒவ்வொரு விண்ணப்பதாரரின் பரீட்சைத் திகதியையும் அறிந்துகொள்வதற்காக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் செய்தித்திரட்டு மற்றும் முகப்புப் பக்கத்திற்கு பிரவேசியுங்கள் **(http://epstopik.hrdkorea.or.kr** ஜூலை 13ஆம் திகதி பிரசுரமாகும்)

**ஆ. பரீட்சை முறைமை - கணனிசார் பரீட்சித்தல்**

**இ. பரீட்சைக் காலப்பகுதி**

| பரீட்சைப் பகுதி | விண்ணப்பதாரர்களுக்கு முன் விளக்கமளித்தல் | காலப் பகுதி | |
|---|---|---|---|
| | | வாசித்தல் | செவிமடுத்தல் |
| முதலாம் அமர்வு | 09.30 – 10.00 | 10.00 – 10.25 (25 நிமிடங்கள்) | 10.25-10.50 (25 நிமிடங்கள்) |
| இரண்டாம் அமர்வு | 11.00 – 11.30 | 11.30 – 11.55 (25 நிமிடங்கள்) | 11.55-12.20 (25 நிமிடங்கள்) |
| மூன்றாம் அமர்வு | 13.30 – 14.00 | 14.00 – 14.25 (25 நிமிடங்கள்) | 14.25-14.50 (25 நிமிடங்கள்) |
| நான்காம் அமர்வு | 15.00 – 15.30 | 15.30 – 15.55 (25 நிமிடங்கள்) | 15.55-16.20(25 நிமிடங்கள்) |

❖ பரீட்சை அபேட்சகர்கள் தமது ஒவ்வொரு அமர்வுக்காக வரும்போது மு.ப. 9.30, 11.00,பி.ப. 13.30, மற்றும் பி.ப. 15.00 ஆகும் போது வருகை தந்து ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும்.

❖ பரீட்சை அமர்வு விபரங்கள் மற்றும் காலப் பகுதிகள் நிலைமைக்கமைய மாறுபடலாம்.

## 07. EPS-TOPIK இற்கான பரீட்சை கட்டமைப்பு மற்றும் தகவுத்திறன்

| பகுதி | வினா எண்ணிக்கை | மொத்தப் புள்ளிகள் | | காலம் |
|---|---|---|---|---|
| | | உற்பத்தி | கடற்றொழில் | |
| வாசிப்பு | 20 | 100 | 90 | 25 நிமிடங்கள் |
| செவிமடுத்தல் | 20 | | | 25 நிமிடங்கள் |
| மொத்தம் | 40 | 100 | 90 | 50 நிமிடங்கள் |

- (பரீட்சை கட்டமைப்பு) – 01. பல்தேர்வு பதில்கள் மூலம்
  02. வாசித்தல் மற்றும் செவிமடுத்தல் இடைவெளியின்றி பரீட்சிக்கப்படும்.
- நிர்மாணத்திற்கான மூலப்பிரமாணம் - மொழிப் பரீட்சையில் 100 மற்றும் 40 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொண்ட மற்றும் 150% மொத்தப் புள்ளிகளில் அதிகமான புள்ளிகளைப் பெறுபவர்களுக்கிடையில் கூடிய புள்ளிகளிலிருந்து குறைந்த புள்ளிகளுக்கிடையில் தேவையான அளவு தெரிவு செய்யப்படுவர்.
- கடற்றொழில் துறை தெரிவு செய்வதற்கான மூலப் பிரமாணம்- மொழிப் பரீட்சையில் 90 மொத்தப் புள்ளிகளில் 36 புள்ளிக்கு மேல் எடுப்பவர்கள் மற்றும் மொத்தப் பரீட்சையில் 200 புள்ளிகளுக்கு மேல் பெறுபவர்களுக்கிடையில் கூடிய புள்ளிகளிலிருந்து குறைந்த புள்ளிகளுக்கிடையில் தேவையான அளவு தெரிவு செய்யப்படுவர்.

**ஈ) பரீட்சைக்காக தேவையானவை**

- பரீட்சை அபேட்சகரின் பரீட்சை அனுமதிப்பத்திரம் (பதிவு நாளன்று விநியோகிக்கப்படும்) செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச் சீட்டு

1. அனைத்து விண்ணப்பதாரரும் செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச் சீட்டை கொண்டு வருதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தை அவர் (ஆண்-பெண்) அனுப்பும் போது இருந்ததாக இருத்தல் வேண்டும்.
2. கடவுச் சீட்டைக் கொண்டு வராத விண்ணப்பதாரர்கள் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

## 08. முதலாவது பரீட்சை சுற்றின் பெறுபேறுகளை வெளியிடுதல்

- பெறுபேறுகளை வெளியிடும் திகதி: 2017 ஒக்டோபர் மாதம் 13ஆம் திகதி
- பெறுபேறுகளை வெளியிடும் விதம்:
- (1) இவெவேப இன் செய்தித்திரட்டு பலகை www.slbfe.lk
  (2) http://www.eps.go.kr , or
  (3) http://epstopik. hrdkorea.or.kr
- ஒவ்வொரு அபேட்சகரின் பெறுபேறுகளையும் அறிவித்தல்
  - http://www. eps.go.kr

II. இரண்டாவது சுற்றுப் பரீட்சை (தொழிற்திறன் மற்றும் திறன்சார் பரீட்சை)

## இரண்டாவது சுற்றில் பரீட்சை நடாத்தப்படும் முறை

- விண்ணப்பிக்கும் காலப்பகுதி – 2017 ஒக்டோபர் மாதம் 23 – 2017 ஒக்டோபர் மாதம் 26 வரை (04 நாட்கள்)
- திறன்சார் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விரும்பும் அபேட்சகர்கள் தமது விண்ணப்பப் படிவங்களை ஒப்படைக்கும் போது அந்த விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கு குறித்துரைக்கப்பட்ட இடங்களில் குறித்த ஆவணங்களை இதன்பொருட்டு ஒப்படைத்தல் வேண்டும்.
- திறன்சார் பரீட்சைக்காக தகைமை பெறாத அபேட்சகர்கள் இந்த குறித்துரைக்கப்பட்ட பதிவு செய்யப்படும் இடத்திற்கு செல்ல வேண்டியதில்லை.
- (முதலாவது சுற்று பரீட்சையில் சித்தியடைந்த அனைவரும் சுயமாகவே 02ஆம் சுற்றுக்காக தெரிவு செய்யப்படுவர்)
- பரீட்சை நடாத்தப்படும் நிலையம் மற்றும் திகதியை அறிவித்தல் - 2017 நவம்பர் மாதம் 10ஆம் திகதி
- தொழிற்திறன் பரீட்சை மற்றும் திறன்சார் பரீட்சைகள் ஒரே நேரத்தில் நடாத்தப்படும். 2017 நவம்பர் மாதம் 18ஆம் திகதி முதல் நவம்பர் மாதம் 26ஆம் திகதி வரை (9 நாட்கள்)
- பெறுபேறுகளை வெளியிடுதல் - 2017 டிசம்பர் மாதம் 8ஆம் திகதி

## 01. திறன்சார் பரீட்சைக்கான ஆவணங்களை ஒப்படைக்கும் முறைமை :

- **திறன்சார் பரீட்சைக்காக ஆவணங்களை ஒப்படைப்பவர்களுக்கானது :**
  - முதலாவது சுற்று பரீட்சையில் சித்தியடைந்தவர்களுள் யாருக்காவது தாம் தெரிவு செய்த கைத்தொழிலில் அனுபவம் இருக்குமானால், தேசிய சான்றிதழ் அல்லது தேசிய வாழ்தொழில் சான்றிதழொன்று இருக்குமானால் இந்த திறன்சார் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.
  - முதலாவது சுற்று பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் தொழில்திறன் பரீட்சைக்குத் தோற்ற வேண்டுமென்பதுடன் விண்ணப்பிக்கத் தேவையில்லை (சுயமாகவே விண்ணப்பம் பதிவேற்றப்படும்) ஆனால் திறன்சார் பரீட்சைக்கு தோற்ற விரும்புபவர்கள் இதற்கான ஆவணங்களை விண்ணப்பிக்கும் காலப்பகுதியினுள் சமர்ப்பித்தல் வேண்டும்.
  - * தொழிற்திறன்சார் பரீட்சையில் கலந்து கொள்ளாதவர்களுக்கு மதிப்பீட்டு புள்ளி விதிமுறையினுள்ள புள்ளிகளைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமை கிடைக்காது.
- விண்ணப்பிக்கும் காலப்பகுதி – 2016 ஒக்டோபர் 23-26 (மு.ப. 9.00 முதல் பி.ப. 4.30 வரை)
- விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இடம் - EPK-TOPIK பெறுபேற்றுடன் அறிவிக்க உள்ளோம்.
- விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளும் முறை – குறிப்பிடப்பட்ட நிலையத்திற்கு நேரே வருகை தருவதன் மூலம்.
- கட்டணம் - இலவசம்.
- தேவையான ஆவணங்கள்

(1) கடவுச் சீட்டு மற்றும் EPS-TOPIK இற்கான பரீட்சை அனுமதிப் பத்திரம்.

(2) திறன்சார் பரீட்சைக்காக விண்ணப்பதாரரினால் பூர்த்தி செய்யப்பட்ட படிவம் (பதிவிடத்தில் அல்லது இணையதளத்தில் பரீட்சிக்கவும்)

(3) திறன்சார் பரீட்சைக்கான ஆவணச் சான்றுகள்

| பகுதி | ஒப்படைக்க வேண்டிய ஆவணம் | தகவல்கள் | ஏனைய தகவல்கள் |
|---|---|---|---|
| தொழில் அனுபவம் 1 அல்லது 2 தெரிவு செய்யுங்கள் | தொழில்சார் சான்றிதழ் (01) | தொழிலாற்றிய நிறுவனங்களில் பெற்றுக்கொண்ட சேவை சான்றிதழ்.* வெளிநாட்டு கம்பனியானால் ஆட்சேர்ப்பு முகவர்நிலைய சான்றிதழ் ஏற்றுக் கொள்ளப்படும். | குறித்த நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். (இணைப்பு 2-2 ஐ பார்க்கவும்) |
| | வேலைவாய்ப்பை பரீட்சிப்பதற்கான ஆவணங்கள் (02) | யாராவது விண்ணப்பதாரர் தொழில் செய்த கம்பனி அல்லது முகவர் நிறுவனம் (வெளிநாட்டு கம்பனி)வங்குரோத்து ஆகியிருப்பதானால், சிறிய வர்த்தக நிலையம் அல்லது அதிகாரமளிக்கப்படாத விவசாயம் மற்றும் மீன்வளர்ப்பு நிலையங்களில் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் 2-3 இணைப்பிலுள்ள ஆவணத்தை பூர்த்தி செய்து சமர்ப்பிக்கலாம். (உறவினர்கள் நீங்கலாக கூட்டிணைந்த உத்தரவாதத்திற்கு இரண்டு பிணையாளர்கள் தேவை) | விண்ணப்பதாரரின் அடையாள அட்டையின் பிரதி மற்றும் கையொப்பம் தேவைப்படும். வெளிநாட்டு தொழில் அனுபவத்திற்கான விசா பிரதி மற்றும் குடிவரவு குடியகல்வு குறிப்புகள் தேவையாகும். |
| பூர்த்தி செய்துள்ள பயிற்சிக் கற்கை நெறிகள் | பூர்த்தி செய்துள்ள பயிற்சி கற்றை நெறிகளின் மூலப்பிரதி தேவையாகும். | கற்கை நெறியை பூர்த்தி செய்துள்ளமைக்காக வழங்கப்படும் அரச அல்லது தனியார் நிறுவனத்தின் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும். (வெளிநாட்டு கற்கைநெறிகள் அடங்கலாக) | பல்கலைக்கழக டிப்ளோமா சான்றிதழ் இதற்காக ஏற்றுக்கொள்ளப்படும். |
| தேசிய சான்றிதழ் | தேசிய மட்டத்திலான பயிற்சி கற்கை நெறி சான்றிதழின் பிரதி அல்லது ஆரம்ப சான்றிதழ் | தேசிய மட்டத்திலான சான்றிதழ்கள் மட்டும் இங்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அவைகளில் உத்தியோகபூர்வ பரீட்சைகள் அடங்கலான தேசிய மட்ட தகவல்கள் இருத்தல் வேண்டும். | வெளிநாட்டு சான்றிதழ்கள் தேவையில்லை. பல்கலைக்கழக சான்றிதழ்கள் தேவையில்லை. |

❖ கொரியாவில் தொழில் செய்த தகவல்கள் இதற்குரித்தாகும்.

❖ கொரிய மனிதவள அபிவிருத்தி பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட படிவத்திற்கு புறம்பாக வேலை வாய்ப்பிற்காக EPS முறையின் மூலம் பெற்றுக்கொண்ட சான்றிதழ் இதற்குரித்தாகும்.

❖ பயிற்சிச் சான்றிதழ்களில் கற்கை நெறி வேறாகவும், மணித்தியாலங்கள் மற்றும் உள்ளடக்கம் குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

❖ இந்த திறன்சார் பரீட்சைக்காக ஒப்படைக்கப்படும் ஆவணங்களின் அல்லது சான்றிதழ்களின் ஏதாவது பொய்யானவை அல்லது போலியானவை என தெரியவரின் அந்த அபேட்சகரின் பரீட்சை பெறுபேறுகள் முழுமையாக இரத்துச் செய்யப்படும் என்பதுடன் மீண்டும் EPS பரீட்சைக்காக தோற்றுவற்கு 3 வருட தடை விதிக்கப்படுவதுடன் குற்றவாளியாகவும் கருதப்படுவார்.

அனுமதிக்கப்படாத தொழில் அனுபவம், பயிற்சி கற்கை நெறி மற்றும் தேசிய சான்றிதழ்களுக்கான உதாரணம்:

**தொழில் அனுபவம்:**

விண்ணப்பிக்கும் கைத்தொழில் துறையினுள் முன்பு வேலை செய்துள்ளார் என விண்ணப்பதாரருக்கு சாட்சிகள் இருப்பினும் அந்த அனுபவம் உரித்துடையதல்லாவிடத்து அதற்கான அனுமதி கிடைக்காது. விற்பனை தொடர்பில், மனித வளங்கள் தொடர்பில், கணக்கியல் துறை, கல்வி, பொதுச் சேவை (தொழில்நுட்பவியலாளர் அல்லாத), காஸ் ஸ்டேஷன், சமையல், சேவை மற்றும் சிகை அலங்காரம் போன்றவை உற்பத்தி, நிர்மாணம், விவசாயம் மற்றும் மீன்வளர்ப்பு மற்றும் கடற்றொழில் ஆகியவற்றிற்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

பிரத்தியேகமாக, விண்ணப்பிக்கும் கைத்தொழில் துறையில் போதனையாளராக முன்பு வேலை செய்த அனுபவம் தொடர்பான ஆவணம் உற்பத்தித் துறையில் பொதியிடலுக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் சமர்ப்பிக்கலாம்.

**பயிற்சி கற்கை நெறிகள் -** விண்ணப்பிக்கும் துறைக்குப் பொருந்தாத பயிற்சியின் பொருட்டான சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. உதாரணமாக தாதியர் சேவை பயிற்சி, கணக்கியல், தலைமைத்துவப் பயிற்சி போன்ற இதன்பொருட்டு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**தேசிய சான்றிதழ் -** விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும் துறைக்கு உரித்தற்ற தேசிய சான்றிதழ் அல்லது உறுதிப்படுத்தப்பட்ட ஆவணத்தை சமர்ப்பிப்பதைத் தவிர்த்தல் வேண்டும். உதாரணம் - சாரதி உரிமம், மொழிப் பயிற்சி சான்றிதழ், தொழில்சார் உரிமம் (மருத்துவ, மருந்தக மற்றும் சட்டத்தரணிகள் உரிமம்) சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

## 02. பரீட்சை நடைபெறும் திகதி மற்றும் இடத்தை அறிவித்தல்

- அறிவித்தல் திகதி – 2017 நவம்பர் 10
- அறிவித்தல் செய்யும் முறைமை - இவெவேப இன் செய்தித்திரட்டு பலகை மற்றும் முகப்புப் பக்கம் www.slbfe.lk
- பரீட்சைக் காலம் - 2017 நவம்பர் 18 – நவம்பர் 26 (மாற்றப்படலாம்)

## 03. தொழிற்திறன் பரீட்சையை நடாத்துதல்

தொழிற்திறன் துறையின் உபவகுதிகள் மற்றும் புள்ளிகள் பகிர்வு

| கைத்தொழில் (தொழிற்திறன் பரீட்சை) | மொத்தப் புள்ளிகள் | தொழிற்திறன் பரீட்சை | | |
|---|---|---|---|---|
| | | உடல் வலு | நேர்முகப் பரீட்சை | பொது தொழிற்திறன் |
| உற்பத்தி | 100 | 30 | 30 | 40 |
| கடற்றொழில் | 110 | 30 | 30 | 50 |

❖ பரீட்சைக் காலம் - 2017 நவம்பர் 18 – நவம்பர் 26 (மாற்றப்படலாம்)
- விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கைக்கமைய மேற்படி காலப்பகுதி மாற்றமடையலாம்.

ஒவ்வொருவருக்குமான பரீட்சை அட்டவணை 2017 நவம்பர் மாதம் 10ஆம் திகதி பகிரங்கப்படுத்தப்படும்.

❖ பரீட்சைக் நேர அட்டவணை

| அமர்வு | அறிவூட்டல் (30 நிமிடங்கள்) | காலப்பகுதி | புள்ளிகள் |
|---|---|---|---|
| முதலாம் அமர்வு | 08.30 – 09.00 | 09.00 – 12.00 | 12.00 – 12.30 |
| இரண்டாம் அமர்வு | 13.00 – 13.30 | 13.30 – 16.30 | 16.30 – 17.00 |

* அபேட்சகர்கள் தமக்குக் கிடைத்த பரீட்சை திகதி மற்றும் இடத்தை மாற்ற முடியாதென்பதுடன் ஒவ்வொரு அமர்விற்கும் 8.30/13.00 மணிக்குப்பின் வருபவர்களுக்கு பரீட்சைக்கான தகைமை கிடைக்காது.

❖ திறன்சார் பரீட்சைக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்கள் இந்த தொழிற்திறன் பரீட்சையின் போது நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சையின்போது மீண்டும் உறுதி செய்யப்படும். அவ்வேளையில ஏதாவது ஆவணம் அல்லது சான்றிதழ் போலியானவை என தெரியவரின் விண்ணப்பதாரரின் பரீட்சைப் பெறுபேறு வெற்றும் வெறிதாக்கப்பட்டு அவர் 3 வருடங்களுக்கு பரீட்சைக்கு தோற்றவியலாது. (விண்ணப்பதாரர் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படுவர்.)

## III. பெறுபேறுகளை வெளியிடுதல்

- **பெறுபேறுகளை வெளியிடும் திகதி: 2017 டிசம்பர் மாதம் 8ஆம் திகதி**
- **பெறுபேறுகளை வெளியிடும் முறைமை:**
  1. இவெவேப இன் செய்தித்திரட்டுப் பலகை www.slbfe.lk
  2. http:// www. eps.go.kr
  3. http://www.epstopik.hrdkorea.or.kr
- ஒவ்வொரு அபேட்சகரின் பெறுபேறுகளையும் அறிவித்தல்
  - http://www. eps.go.kr

மதிப்பீட்டு அடிப்படையில் புள்ளிகள் வழங்கும் முறை மூலம் நடாத்தப்படும் பரீட்சைப் பெறுபேறுகளின் செல்லுபடியாகும் தன்மை – அறிவித்தல் வழங்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு வருடங்களுக்குச் செல்லுபடியாகும். (2017 டிசம்பர் மாதம் 8ஆம் திகதி முதல் 2019 டிசம்பர் மாதம் 7 ஆம் திகதி வரை)

## IV. ஏனைய அறிவித்தல் மற்றும் கருத்துரைகள் -

1. நிற பார்வையற்றோர், நிற பலவீனமுடையோர் இந்த புள்ளி முறைமைசார் பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் முள்ளந்தண்டு ஊனம் அல்லது விரல் வெண்டுண்டவர்களும் வேலைவாய்ப்பு பட்டியலிருந்து நீக்கப்படுவார்கள்.
2. டிஜிட்டல் சாதனங்களின் பாவனை (கைபேசி-ஸ்மார்ட் தொலைபேசிகள், டெப்லட் கணனிகள், மடிக்கணனிகள், குறிப்புப் புத்தகங்கள், இசை மற்றும் ஒலிப்பதிவு சாதனங்கள், புகைப்படக்கருவிகள் அல்லது தகவல் பெற்றுக் கொள்ளல் அல்லது வெளிப்படுத்தல் ஆகியன அடங்கலாக ஆனால் வரையறுக்கப்பட்டதல்ல) முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. டிஜிட்டல் சேவையை பரீட்சை வேளையில் பாவிப்பது அல்லது தம்வசம் வைத்திருப்பது மோசடி செய்வதற்கான உத்தியொன்று என கருதப்படலாம்.
3. பரீட்சை நிலையத்தினுள் ஒழுங்கீனமாக நடந்து கொள்வதன் மூலம் பரீட்சையை மோசடி செய்வதாக குற்றம் சுமத்தப்பட்டு மூன்று வருட காலத்திற்கு பரீட்சைத் தடை விதிக்கப்படும்.

   திறன்சார் பரீட்சைக்காக சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் பரீட்சைக் கால செயற்பாட்டின் மூன்று வேளைகளில் பரிசீலனைக்கு உட்படுத்தப்படும். ஆவணங்கள் பொய்யானவை எனத் தெரியவரின் பரீட்சை பெறுபேறுகள் பெறுமதியற்றவையாக்கப்பட்டு மூன்று வருட காலத்தில் எந்தவொரு EPS முறைமையிலான பரீட்சையையும் அந்நபர் எழுத இயலாது.
4. கடவுச் சீட்டினதும் EPS-TOPIK விண்ணப்பப் படிவத்தினதும் தகவல்கள் ஒன்றுக்கொன்று முரணாகவிருப்பின், விண்ணப்பதாரர் இந்த மதிப்பீட்டுப் புள்ளி முறைக்கு தோற்றும் சந்தர்ப்பம் கிடைக்காதென்பதுடன் கொரியாவிற்கும் இப்பரீட்சையினூடக பயணம் செய்ய இயலாது.
5. தொழில்சார் சான்றிதழ்கள் மற்றும் தொழிலை சான்றுப்படுத்துவதற்கு சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ்களினுள் முக்கியமான தகவல்களான பெயர்கள், கையொப்பங்கள், தொடர்பெண் ஆகியன நீக்கப்படலாகாது. எவ்விதமான தகவல்களையும் அழிக்கும் திரவங்களினால் அல்லது வேறேதாவது முறைமையை பாவித்தல் விண்ணப்பதாரர்களின் செல்லுபடியாகும் தன்மையை இரத்துச் செய்யும்.

- சித்திகரமாக இந்த அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றி கூடிய புள்ளிகளைப் பெற்றவர்கள் தொழில்வாய்ப்பு ஒப்பந்தம் கிடைக்கும் பட்டியலில் உள்ளடக்கப்படுவர். ஆனால் தொழிலொன்றை கட்டாயம் பெற்றுக்கொடுக்கும் உத்தரவாதம் வழங்கப்படமாட்டாது.
- மருத்துவப் பரீட்சையில் சித்தியடையாத கொரியாவில் சட்ட விரோதமாக இருந்துள்ளமை தெரியவந்துள்ளவர்களுக்கு கொரிய தொழில்வாய்ப்பு பெற்றுக்கொடுக்கப்படமாட்டாது.